# அறநெறிக் கல்வியின் அவசியம்

கல்வியியும் செல்வமும் மக்களால் தேடப்படும் இரண்டு முக்கியப் பொருள்கள் ஆகும். இவ்விரண்டினுள் மிகச் சிறந்தது கல்வியேயாகும். ஏனெனில் நாம் கற்ற கல்வியை மற்றவர்களால், கொள்ளவோ அழிக்கவோ இயலாது. அது பிறருக்குக் கொடுத்தாலும் குறையாமல் பெருகிக் கொண்டேயிருக்கும்.

கல்வி கற்கும்போது முக்கியமாக அறநெறிக் கல்வியைக் கருத்தூன்றிக் கற்க வேண்டும். அறநெறி தவறினால் வாழ்க்கையில் துன்பம் ஏற்படும் என்று நம்பி அனைவரும் பிறருக்குத் தீங்கு செய்யாமல் அன்பைப் பெருக்க வேண்டும். எப்போதும் உண்மையையே கூற வேண்டும் என்னும் இலட்சியத்தைப் பின்பற்ற வேண்டும். பொதுமக்கள் எவ்வளவுதான் அறத்தைப் புறக்கணித்தாலும் அதன் ஆற்றல் மங்காது. உலகத்தில் சிறந்து விளங்கிய சான்றோர்களுள் புத்தர், ஏசு, திருவள்ளுவர், ஔவையார், காந்தி அடிகள் ஆகியோர் சிலர் ஆவர். அவர்கள் அனைவரும் அறத்தின் பெருமை சிறக்கக் கூடிய வகையில் தொண்டு செய்து வாழ்ந்தவர்கள்.

சிலர் சமயத் துறையில் ஈடுபட்டு அதன் சடங்குமுறைகளைப் போற்றி, அறநெறியை மறந்து விடுகின்றனர். இவ்வாறு செய்வது குற்றமாக இருந்தாலும் சமயம் நமக்கு அறநெறியைத்தான் கற்றுக் கொடுக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும்.

உலகத்தில் அறவழியே ஒரு நெறியாய், சமயமே வாழ்வின் அடிப்படையாய் வாழ்ந்தவர்களில் காந்தி அடிகள் முக்கியமானவர். காந்தி அடிகள் உண்மை என்னும் கடவுளை வழிபட்டுத் தீங்கு செய்யாமல் வாழ்ந்தார். இதுவே அவர் சமயத்துறையில் பெற்ற பெரும் வெற்றி. காந்தி அடிகள் தாம் விரும்பிய அறப் பண்புகளை உறுதியாக நாடி உழைத்தார். அதன் காரணமாக அவர் சத்தியம், அகிம்சை ஆகிய இரண்டையும் தடுமாற்றம் நேராமல் பின்பற்றினார்.

அறநெறிக் கல்வி மற்றவற்றைவிட முக்கியமாகக் கருதப்படுகிறது. நாட்டு மக்கள் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் வாழ அறநெறிக் கல்வி பெரிதும் உதவுகிறது. அறநெறிக் கல்வி தமக்காகவும் பிறருக்காகவும் உழைக்கின்ற நற்பண்பை உணர்த்தும்; மேலும் உழைப்பில்லாமல் வாழ்வது தீங்கு; அளவுக்கு மீறிப் பேசுவதும் தீங்கு என்பதை உணர்த்தி, வாழ்வை ஒழுங்குப்படுத்துகின்றது. உள்ளத்தில் உண்மை, பேச்சில் வாய்மை, செயலில் மெய்ம்மை என்ற அறநெறியை மேற்கொண்டு வாழ்ந்தால், மக்கள் மறந்தும் தீய சொல் சொல்ல மாட்டார்கள். மேலும், பிறர் உள்ளத்தைப் புண்படுத்தவும் மாட்டார்கள்.

சிங்கப்பூர்க் குடியரசில் பள்ளிச் சிறுவர்கள் குற்றச் செயல்களில் ஈடுப்பட்டுக் கெட்டுப் போகாமல் இருக்க அரசாங்கம் அறநெறிக் கல்வியைக் கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறு அறநெறிக் கல்வியைச் சிறுவர்களுக்குப் போதிப்பதால் பிற்காலத்தில் இவர்கள் நல்ல குடிமக்களாகத் திகழலாம். இதனால் நாட்டில் நிகழும் கொலை, கொள்ளை போன்ற தீயச் செயல்கள் குறைந்துவிடும்.

அறநெறிக் கல்வி சிறு பிள்ளைகளுக்கு முக்கியப் பாடமாக அமைகிறது. பெற்றோர்களையும், முதியோர்களையும், மூத்தவர்களையும் கண்டால் அவர்களிடம் எப்படிப் பேச வேண்டும்; எப்படிப் பழக வேண்டும் என்று அறநெறிக் கல்வி போதிக்கிறது. இவ்வாறு செய்வதால் குடும்பத்தில் சிறுவர்களின் சச்சரவு குறையக் கூடும்.

உண்மையைக் கடைப்பிடிக்காமல் முன்னேற்றம் அடைய முடியாது. முன்னேற்றமும் சீர்திருத்தமும் அறநெறியோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன. சமுதாயத்தில் தீய வழிகளில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நல்வாழ்க்கை அமைத்துத் தர அறநெறிக் கல்வி கருவியாக விளங்குகிறது.

கல்வி கற்றவர்களுக்கு என்றும் சமுதாயத்தில் பெருமதிப்பு உண்டு. ஆனால், அவர்கள் அறநெறிக் கல்வியைப் புறக்கணித்தால் பிறகு அவர்கள் கற்ற கல்வி பயனற்றதாகிவிடும். ஆனால், கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு அல்லவா? மக்கள் பயிலும் அறநெறிக் கல்வி அவர்களை ஒழுக்கம் உள்ளவர்களாக உருவாக்கப் பெரிதும் துணைபுரியும். எனவே, அனைவரும் அறநெறிக் கல்வியை ஆர்வத்துடன் கற்க வேண்டும்.

**ப.சுரேஷ்**
**புகுமுக வகுப்பு 3 (1984)**
**கிம் மோ உயர்நிலைப் பள்ளி**